**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE-1, TAMBARAM**

| DVC. No. | 27/2024 | LW : | - | PW : | |
|---|---|---|---|---|---|
| Name : | மாலினிதேவி | Age : | 34 | | |
| Father's Name/ Husband's name : | அருண்குமார் | Designation: | | | |
| Address : | எண்.71, மாமல்லன் தெரு, ஆர் எம்கே நகர், புது பெருங்ளத்தூர் | District : | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act,1969 on the day of 04.07.2026 (Accused present).

**குறுக்கு விசாரணை—**

1.இந்த வழக்கானது என்னுடைய விருப்பத்தின் பெயர்தான் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் என்னுடைய விருப்பத்தினால் தான் தாக்கல் செய்யப்பட்டது.

2. திருமணத்திற்கு பின்னிட்டு இருவரும் எங்கு வசித்து வந்தோம் என்றால் குன்றத்தூரில் வசித்து வந்தோம்.

3. குன்றத்தூரில் எந்த ஆண்டு வரை வசித்து வந்தோம் என்றால் 2020 ஆம் வருடம் ஜூலை மாதம் வரையிலும் அங்கு வசித்து வந்தோம்.

4.அதன் பின்னிட்டு எங்கு வசித்து வந்தீர்கள் என்றால் திருமழிசையில் வசித்து வந்தோம்.

5.திருமணத்தின் பயனாக குழந்தை உள்ளதா என்றால் உள்ளது

6. குழந்தை எப்போது பிறந்தது என்றால் 23.02.2021

7. அப்போது இருந்த வீடு சொந்த வீடா வாடகை வீடா என்றால் வாடகை வீடு.

8. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் குத்தகைக்காண வீடு என்று குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் அது எந்த வீடு என்று

சொன்னால் அது பெருங்குளத்தூரில் உள்ள வீடு.

9. எவ்வளவு நாள் வரை ஒன்றாக வசித்து வந்தோம் என்றால் எட்டு மாதம் வசித்து வந்தோம் கடந்த 2021 ஆம் வருடம் ஜூன் மாதம் முதல் 2022 ஜூன் மாதம் வரை அங்கு ஒன்றாக வசித்து வந்தோம்

10. மேற்படி லீசானது யாருடைய பெயரில் பதிவு செய்யப்பட்டது என்னுடைய கணவர் எனது தந்தையின் பெயரில் பதிவு சொல்ல சொன்னதால் எனது தந்தை பெயரில் பதிவு செய்யப்பட்டது.

11. லீசானது மொத்த தொகை எவ்வளவு என்றால் 7,50,000

மேற்படித்தொகை யாரால் கொடுக்கப்பட்டது என்றால் எனது தந்தையால் கொடுக்கப்பட்டது.

13. தற்போதும் அந்த வீட்டில் தான் வசித்து வருகின்றேன் என்றால் இல்லை.

14. குத்தகை முடிந்த பின்பு குத்தகைத் தொகை திரும்ப பெறப்பட்டதா என்றால் திரும்ப பெறப்பட்டது.

15. மேற்படி குத்தகை தொகை யாரால் பெறப்பட்டது என்றால்( மேற்படி கேள்வியின் போது வழக்கறிஞர் மனுதாரர் வழக்கறிஞர் அவர்கள் குறிப்பிட்டு இந்த கேள்வி தேவையற்றது என்றார் நீதிமன்றம் இந்த கேள்வி தேவையானது என்று பதிவு செய்தது) மேற்படித்தொகை எனது தந்தையால் பெறப்பட்டது.

16. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் மேற்படி குத்தகை தொகை எனது கணவர் தான் கொடுக்க வேண்டும் என்று என்ன காரணத்திற்காக கேட்கின்றேன் என்றால் அந்த சமயத்தில் எனது தாயாரின் இதய அறுவை சிகிச்சைக்கு பணம் தேவைப்பட்டது அப்போது வேறு ஒருவர் மூலமாக தான் பணம் வாங்கினோம்.

17. அப்போது எவ்வளவு தொகை பெறப்பட்டது என்றால் அது எனக்கு

தெரியாது.

18. நான் தாக்கல் செய்த மனுவில் குழந்தையானது சிறப்பு குழந்தை என்று குறிப்பிட்டு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் எதன் அடிப்படையில் மேற்படி சிறப்பு குழந்தை என்று குறிப்பிட்டு சொல்லி உள்ளேன் என்றால் கடந்த 2022 ஆம் ஆண்டு அவர் அம்மா அப்பா என்ற வார்த்தை தவிர மற்ற எந்த வார்த்தைகளும் பேசவில்லை அது குறித்து நான் மருத்துவமனையில் சென்று கேட்டேன் அப்பொழுது மருத்துவர்கள் கூறினார்கள் மூன்று வயதில் தெரியக்கூடிய விஷயங்கள் இரண்டு வயதில்தான் தெரிகின்றது அதனால் சிறப்பு சிகிச்சை தேவைப்படுகிறது என்று மருத்துவர்கள் கூறினார்கள்.

19.எந்த மருத்துவரும் சிறப்பு குழந்தை என்று சான்று வழங்காமல் நானே சிறப்பு குழந்தை என்று கூறுகின்றேன் என்றால் பேசுவதற்கான குறைபாடு மட்டுமே இருந்தது ஆனால் தற்போது நல்ல முறையில் பேசுகின்றார்.

20. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் சகோதரி அவர்களிடம் ரூபாய் 6 லட்சம் கடன் வாங்கி உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொல்லியுள்ளேன் என்றாலும் மேற்படி தொகை வாங்கியது உண்மையா என்றால் உண்மை.

21. மேற்படி தொகை யார் முன்னிலையில் பெறப்பட்டது என்றால் எனது தந்தை எனக்காக எனது அக்காவிடம் கடன் வாங்கினார்.

22. மேற்படி தொகை கடன் பெறும் பொழுது உடன்படிக்கை ஏதாவது ஏற்படுத்தப்பட்டதா என்றால் கையொப்பம் செய்து கொடுத்தார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது. மேற்படி தொகையானது ஆறு லட்சம் மொத்தமாக கடன் பெறவில்லை. ஒவ்வொரு மாதமும் கொஞ்சம் கொஞ்சமாக வாங்கி மொத்த தொகை 6 லட்சம் வந்தது

23. மேற்படி தொகை பெறப்பட்டதற்கு ஏதாவது ஆவணங்கள் உள்ளதா என்றால் எனது தந்தையிடம் உள்ளது.

24. மேற்படி கடன் சம்பந்தமாக வங்கி பரிவர்த்தனை குறித்த ஆவணங்கள் ஏதாவது என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யபடவில்லை.

25. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் மேற்படி தொகை குறித்து இங்கேயும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரியான ஆவணங்கள் இல்லை என்பதால் மேற்படி சங்கதிகள் குறித்து நான் சொல்லவில்லை.

26. மேற்படி தொகை பெறுவதற்கு விருப்பம் இல்லை என்ற காரணத்தினால் தான் நான் நிரூபணம் வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் ஆவணம் இல்லாததால் குறிப்பிடவில்லை.

ஒப்பம் /G.செந்தமிழ் செல்வன்
நீதித்துறை நடுவர் எண்–1
தாம்பரம்